

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் இன்று (23.04.2026) வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு, நேற்று (22.04.2026) அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சீதாதேவி கரோடியா இந்து வித்யாலயா மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளியில் அனைத்து மகளிர் வாக்குச்சாவடி அமைக்கப்பட்டுள்ளது.

# தமிழக சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிப்பீர்!

## ஒவைசி வேண்டுகோள்!

ஐதராபாத்,ஏப்.23-

**தமிழக சட்டமன்றத் தேர்தலில் முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்குமாறு ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

இது தொடர்பாக’எக்ஸ்’வலைதளத்தில் அவர் வெளியிட்டுள்ள வீடியோ பதிவில் கூறியிருப்பதாவது:-



தமிழகத்தில் நடைபெறவுள்ள சட்டமன்றத் தேர்தலில், ஏ.ஐ.எம்.ஐ.எம். கட்சி சார்பில் நான் ஒரு வேண்டுகோளை முன்வைக் கிறேன். தமிழக வாக்காளர்கள் தங்களது வாக்குகளை மு.க.ஸ்டா லின் அவர்கள் தலைமையிலான தி.மு.க. கூட்டணிக்கு செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக மக்களின் பேராதரவுடன் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீண்டும் ஆட்சியை பிடிப்பார் என்று நான் பெரிதும் நம்புகிறேன். தி.மு.க. தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்ட ணிக்கு ஏற்கனவே எங்கள் கட்சி ஆதரவு தெரிவித்துள்ளது.

எனவே, இன்று (23ந் தேதி) நடைபெறவுள்ள தேர்தலில் தி.மு.க. கூட்டணி வேட்பாளர்களை பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

### இன்று சொந்த ஊர் சென்று வாக்களிக்க ஏதுவாக

# 11,323 சிறப்புப் பேருந்துகள் இயக்கம்!

## போக்குவரத்துத் துறை தகவல்!

சென்னை, ஏப். 23-

சென்னையில் உள்ளவர்கள் சொந்த ஊர் சென்று வாக்களிக்க வசதியாக 11,323 சிறப்பு பேருந்துகள் இயக்கப்படும் என்று போக்குவரத்துத் துறை தெரிவித்துள்ளது. வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 23 வரை தற்போது இயக்கப்படும் 2,092 பேருந்துகளுடன் கூடுதலாக 6,234 பேருந்துகள் இயக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக போக்குவரத்துத் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில், ‘2026 சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு, வரும் 21/04/2026 முதல் 23/04/26 பிற்பகல் வரை சென்னையிலிருந்து தினசரி இயக்கக் கூடிய 2,092 பேருந்துகளுடன், 6234 சிறப்புப் பேருந்துகள் மூன்று நாட்களுக்கும் சேர்த்து மொத்தமாக, 11,323 பேருந்துகள் இயக்கப்படவுள்ளது.

**சென்னையில் இருந்து இயக்கப்படும் பேருந்துகள்**

கிளாம்பாக்கம் புறநகர் பேருந்து நிலையம்: கடலூர், சிதம்பரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, கும்பகோணம், கோவை, தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம் வரை பேருந்துகள் இயக்கப்படும்.

கிளாம்பாக்கம் மாநகர பேருந்து நிலையம்: திருவண்ணாமலை, வந்தவாசி, போளூர் வரை பேருந்துகள் இயக்கப்படும்.

கோயம்பேடு பேருந்து நிலையம்: கிழக்கு கடற்கரை, காஞ்சிபுரம், வேலூர், பெங்களூரு, திருத்தணி மார்க்கமாக செல்லும் பேருந்துகள்

மாதவரம் பேருந்து நிலையம்: பொன்னேரி, ஊத்துக்கோட்டை, கும்பகோணம், திருச்சி, சேலம், திருவண்ணாமலை வரை பேருந்துகள் இயக்கப்படும்.

**முன்பதிவு வசதி**

முன்பதிவு செய்து கொள்ள நடைமுறையில் உள்ள இணையதள வசதியான tnstc official app மற்றும் www.tnstc.in போன்ற இணையதளங்கள் மூலமாகவும் முன்பதிவு செய்துகொள்ள வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனவே, கடைசி நேர கூட்ட நெரிசலில் பயணிப்பதை தவிர்த்து, பயணிகள் தங்கள் பயணத்தை முன்கூட்டியே திட்டமிட்டு 21/04/2026 முதல் 23/04/2026 வரை பயணம் செய்ய முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பயணிகளின் வசதிக்காக 24x7 கட்டுப்பாட்டு அறை**

தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக பேருந்துகளின் இயக்கம் குறித்து அறிந்து கொள்வதற்கும் மற்றும் புகார் தெரிவிப்பதற்கு ஏதுவாக, 94450 14436 என்ற தொலைபேசி எண்ணை (24x7 மணி நேரமும் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. இதுமட்டுமின்றி. பயணிகளின் நலன் கருதி, கோயம்பேடு. மாதவரம் மற்றும் கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் போதுமான அலுவலர்கள் நியமிக்கப்பட்டு பேருந்து இயக்கத்தை கண்காணிக்க 24 மணி நேரமும் கட்டுப்பாட்டு அறை (Control Room) செயல்படும்.

**மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள்**

பொதுமக்களின் வசதிக்காக கோயம்பேடு பேருந்து நிலையத்திலிருந்து மேற்கூறிய பேருந்து நிலையங்களுக்கு செல்ல ஏதுவாக மாநகர் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் இணைப்புப் பேருந்துகள் 24 மணி நேரமும் இயக்கப்படும்.

**இரயில்கள் (தொடர் வண்டி)**

பொதுமக்களின் வசதிக்காக 19-04-2026 முதல் 28-04-2026 வரை சென்னையில் இருந்து பிற ஊர்களுக்கும் மற்றும் பிற ஊர்களிலிருந்து சென்னைக்கு 30 சிறப்பு இரயில்கள் இயக்கப்படவுள்ளது. குறிப்பாக 21-04-2026 முதல் 23-04-2026 வரை 5 சிறப்பு இரயில்கள் இயக்கப்படவுள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

### முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை! ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரை!

# ‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா!

## முனைவர் ம.திருமலை நூலை வெளியிட – சு.வெங்கடேசன் எம்.பி. பெறுகிறார்!

மதுரை, ஏப்.23-

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் ‘தமிழியல் கலைக் களஞ்சியம்’ வெளியீட்டு விழா 25.4.2026 மாலை 5.00 மணியளவில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், மதுரையில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழுத் தலைவர் ப.சிதம்பரம் எம்.பி. தலைமையுரையாற்றுகிறார்.

தமிழ்ப் பல்கலைக் கழக மேனாள் துணைவேந்தர் முனைவர் ம.திருமலை நூலை வெளியிடுகிறார்.

சு.வெங்கடேசன் எம்.பி. நூலை பெற்றுக் கொள்கிறார்.

தமிழ் வளர்ச்சிக் கழக பொருளாளர் பேராசிரியர் சா.சரவணன் நன்றி கூறுகிறார்.

இவ்விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவலர் குழு, ஆட்சிக் குழு, பொதுக் குழு உறுப்பினர்கள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர்.

### சென்னை மாவட்டத்தில் பணிபுரியவுள்ள

# வாக்குச்சாவடி அலுவலர்கள் - காவலர்களைத் தேர்வு செய்யும் பணி!

## கணினி குலுக்கல் முறையில் நடைபெற்றது!

சென்னை, ஏப். 23-

சென்னை மாவட்டத்தில் வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் காவலர்களை கணினி குலுக்கல் முறையில் தேர்வு செய்யும் பணி சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், தலைமையில் நேற்று நடைபெற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத் தேர்தல்-2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் 975 இடங்களில் உள்ள 4,085 வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள 19,604 வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான கணினி குலுக்கல் சுழற்சி முறை தேர்வு (Polling Personnel Randomization) சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தலைமையில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் முன்னிலையில் நேற்று (21.04.2026) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

முன்னதாக, சென்னை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் அவர்கள் தலைமையில், சென்னை மாவட்ட தேர்தல் காவல் பார்வையாளர் திரு.பி.சங்கர் ஜெயிஸ்வால், இ.கா.ப., அவர்கள் முன்னிலையில் சென்னை மாவட்டத்திற்குட்பட்ட 16 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள 1,657 காவலர்களை கணினி குலுக்கல் முறையில் (Police Personnel Randomization) தேர்வு செய்யும் பணி நடைபெற்றது.

இந்நிகழ்வுகளில், தேர்தல் பொதுப் பார்வையாளர்கள் தேம்ஜென்வாபாங் ஆவோ, விக்ரம் குமார், ஜி.ஸ். சஹோடா, எஸ். எல். நவீன், சுதிர் பாரா, ரஞ்சித் குமார் சிங், திருமதி நான்சி சஹாய், கன்ஷியாம் தோரி, கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, (சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர்), திருமதி க. கற்பகம், (இணை ஆணையாளர் (கல்வி),

வி.சிவ கிருஷ்ணமூர்த்தி, (துணை ஆணையாளர் (பணிகள்), காவல் இணை ஆணையாளர் (தலைமையிடம்) எஸ்.மகேஷ்வரன், கூடுதல் காவல் துணை ஆணையாளர் எம்.குமரகுருபரன் மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




சென்னை சிந்தனையாளர் மன்றம் சார்பில், “தொகுதி மறுவரையறை பெரிய வெற்றி தமிழ்நாட்டுக்கு’! பெருந்தோல்வி ஒன்றிய அரசுக்கு! ஏன்? எப்படி?” எனும் தலைப்பில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கத்தில் கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., தி இந்து குழுமம் இயக்குநர் ‘இந்து’ என்.ராம் ஆகியோர் சிறப்புரையாற்றினர். இதில் முத்தமிழ்ப் பேரவை குணாநிதி அமிர்தம் வரவேற்றார். சென்னை சிந்தனையாளர் மன்ற ஒருங்கிணைப்பாளர் விஜயா தாயன்பன் தலைமை வகித்தார்.

# திருவாரூர் மாவட்ட தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியே வெல்லும்!

## கருத்துக்கணிப்பிலும் மக்கள் கணிப்பிலும் கழக ஆட்சிக்கு பெருகும் ஆதரவு!

திருவாரூர்,ஏப்.23.

திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருவாரூர், மன்னார்குடி, நன்னிலம், திருத்துறைப்பூண்டி உள்ளிட்ட நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் திராவிட நாயகர் தளபதி அவர்களின் நல்வாழ்த்துக்களோடு, மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களி தந்த திருவாரூரில் தி.மு.க. சார்பில் பூண்டி.கே.கலைவாணன் அவர்களும் , மன்னார்குடியில் தி.மு.க. சார்பில் டி.ஆர்.பி.ராஜா அவர்களும் நன்னிலம் தொகுதியில் எஸ்டிபிஐ சார்பில் முகமது முபாரக் அவர்களும் , திருத்துறைப்பூண்டியில் சிபிஐ சார்பில் கே. மாரிமுத்து அவர்களும் மக்களின் ஏகோபித்த ஆதரவோடு போட்டியிடுகின்றனர்.

மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து திராவிட நாயகர் கழக தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் திருவாரூரில் பிரச்சாரத்தை துவக்கி வைத்த நிலையில் , திராவிடர் கழக தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்களும், கழக இளைஞர் அணி செயலாளர் இளைஞர்களின் நம்பிக்கை உதயநிதி ஸ்டாலின் அவர்களும் , நாடாளுமன்ற உறுப்பினர் கவிஞர் கனிமொழி அவர்களும் தொடர்ந்து பிரச்சாரம் செய்தனர்.

மேலும் சி.பி.ஐ. தேசிய கட்டுப்பாட்டுக்குழு தலைவர் இரா.முத்தரசன், சி.பி.எம். கட்டுப்பட்டுக்குழு தலைவர் ராமகிருஷ்ணன் உள்ளிட்ட தேசிய தலைவர்களும் திருவாரூரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு பிரச்சாரம் மேற்கொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாண்டுகால பொற்கால ஆட்சி, மக்களுக்கு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் ஆட்சி தந்திருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் தொகை, மகளிர் விடியல் பயணம், புதுமைப்பெண் ,தமிழ்புதல்வன் , நான் முதல்வன் உள்ளிட்ட உலகம் போற்றும் அற்புத திட்டங்கள் , ஒன்றிய அரசின் இந்தி திணிப்பு, புதிய கல்விக்கொள்கை , சனாதன திணிப்பு, சி.ஏ.ஏ., புதிய வேளாண் சட்டம், நாடாளுமன்ற தொகுதிகள் சீரமைப்பு உள்ளிட்ட எண்ணற்ற நெருக்கடிக்களில் அதனை தனது ராஜதந்திரங்களால் வென்றடுத்த முதலமைச்சரின் வெற்றியால் ஈர்க்கப்பட்ட பொதுமக்கள் , இப்படி ஒரு முதல்வரை பெற்றமைக்கு பெருமைப்படுவதோடு , மக்கள் இடத்தில் இருந்து சிந்திக்கும் ஒரு முதல்வரை 2026ல் மீண்டும் முதல்வராக தெரிவுசெய்ய முடிவெடுத்திருக்கிறார்கள்.

இதனையே அனைத்து பத்திரிகை மற்றும் ஊடகங்கள், சமூக வளைதளங்களில் என அனைத்திலும் ஒத்த குரலாக பிரதிபலிக்கிறது. திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு தொகுதிகளில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியே வெல்லும் என்பதும் தமிழ்நாட்டில் தி.மு.க. தலைமையிலான ஆட்சியே தொடரும் என்பதும் கருத்துக்கணிப்புக்களாலும் மக்கள் கணிப்புக்களாலும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.



இந்தியாவில் நடைபெறும் தேர்தல் நடவடிக்கைகளை பார்வையிடுவதன் ஒரு பகுதியாக, தமிழ்நாட்டிற்கு வருகைதந்துள்ள சர்வதேச அளவிலான 10 நாடுகளின் பார்வையாளர்கள் பங்கேற்ற தமிழ்நாடு தேர்தல் நடவடிக்கைகள் தொடர்பான செயல் விளக்கக் கூட்டம் தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி திருமதி அர்ச்சனா பட்நாயக், தலைமையில் நேற்று (22.04.2026) ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (IT) ஸ்ருதஞ்சய் நாராயணன், கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்கள் திருமதி க. கற்பகம், இணை ஆணையாளர் (கல்வி)) கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டார துணை ஆணையாளர்) மற்றும் தேர்தல் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.